

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 26.2.2026 அன்று தலைமைச் செயலகத்தில், 5ஆம் வகுப்பு மாணவன் யோகேஸ்வரன் சந்தித்து, நீலகிரி வரையாடுகளைப் பற்றி தான் எழுதிய "அப்போது நான் வரையாடாக இருந்தேன்" – என்ற புத்தகத்தை வழங்கியபோது, முதலமைச்சர் அவர்கள் அம்மாணவனுக்கு அய்யன் திருவள்ளுவர் சிலையினை வழங்கி, வாழ்த்தினார். உடன், அம்மாணவனின் பெற்றோர் சுரேஷ்வரன், திருமதி நிவேதிதா ஆகியோர் உள்ளனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாளை

# நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, மார்ச் 1–

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 73வது பிறந்தநாளான மார்ச் 1 அன்று தொழிலாளர்கள் அனைவரும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்கள் வரிசையில் நான்காம் தலைமுறையாக இந்தியாவிற்கே முன்னோடியாக திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் மார்ச்1 அன்று. கழகத் தலைவர்



அவர்களின் ஐந்தாண்டு கால ஆட்சியில் தொழிலாளர்களுக்கு ஏராளமான ஊதிய உயர்வு ஒப்பந்தங்கள், பணப் பயன்கள் வழங்கி சிறப்பானதொரு ஆட்சியை நடத்தி வருகிறார்.

கழகத் தலைவர் அவர்களின் ஆட்சியில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 12 சதவிகித ஊதிய உயர்வுடன் பே மேட்ரிக்ஸ் மற்றும் தனித்தனி ஊதியம் விகிதம் வழங்கியுள்ளார். மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 6 சதவிகித ஊதிய உயர்வு, 10 ஆண்டு பணி முடித்தவர் களுக்கு 3 சதவிகித வெயிட்டேஜ், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் பருவ கால தொழிலாளர்களுக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கி சாதனை படைத்துள்ளார்.

மேலும் கூட்டுறவு நூற்பாலை, கோஆப் டெக்ஸ் தொழிலாளர்கள், தேயிலை, ஆவின், ரப்பர், சர்க்கரை ஆலை ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கியதுடன், அங்கன்வாடி பணியாளர்களுக்கு பணிக்கொடை உயர்வு, ஓய்வூதியம் உயர்வு, குடும்ப ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு சாதனைகளைப் படைத்து தொழிலாளர்களுக்கு ஒரு நம்பிக்கை அரணாக என் றென்றும் தளபதி அவர்கள் விளங்கி வருகிறார். மார்ச் 2026 வரை ஓய்வு பெறும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஓய்வுகால பணப் பயனுக்காக ரூ.2446.46 கோடி ஒதுக்கி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

இவ்வளவு பெரிய மகத்தான சாதனை புரிந்து 5 ஆண்டு காலம் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிட மாடல் நாயகன் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை குக்கிராமம் முதல் பட்டி தொட்டியெங்கும் கழக அரசின் சாதனைகளை துண்டுப்பிரசுரமாக அச்சிட்டு, அவரது பிறந்தநாளன்று ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், அறுவை உணவு வழங்கியும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென அனைத்து தொழிலாளர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறுஅவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மார்ச் – 1 கழகத் தலைவரின் பிறந்தநாள் விழா! தஞ்சை மத்திய மாவட்டத்தில்

# மாநகர - ஒன்றிய - பகுதி - பேரூர் - கிளைக் கழகங்களில் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*தஞ்சாவூர், மார்ச் 1-*

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான மார்ச்1 அன்று தஞ்சை மத்திய மாவட்டம் முழுமைக்கும் கழக இருவர்ண கொடியேற்றி சிறப்பாக கொண்டாட வேண்டி கழக நிர்வாகிகளுக்கு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :



எல்லோருக்கும் எல்லாம் எனும் தாரக மந்திரத்துடன் 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான மார்ச் - 1 அன்று நமது தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் வட்டக் கழகங்கள் தோறும் கழக இருவர்ண கொடியேற்றி, பேரறிஞர் அண்ணா, முத்தமிறிஞர் கலைஞர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் எழுச்சி மிகு உரைகளை ஒலிப்பரப்பி, இனிப்புகள் வழங்கியும், ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கியும், வருடா, வருடம் செய்வதை போன்று மார்ச் மாதம் முழுமைக்கும் முதியோர் இல்லம், ஆதரவற்ற குழந்தைகள் இல்லம், கருணை இல்லங்களில் உணவு மற்றும் அவர்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பாக கழகத் தலைவரின் பிறந்தநாளை கொண்டாட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களையும், மாவட்ட சார்பு அணியினரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### மார்ச்.1 கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா


# நாகை மாவட்டத்தில் வார்டு, கிளைகள் தோறும் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!

*நாகை, மார்ச் 1-*

*நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.*

*மக்கள் நலன் ஒன்றே தன்னுடைய வாழ்நாள் இலட்சியம் என்று அரும்பாடு பட்டு வரும் கழகத் தலைவர், முதலமைச்சர்*



*மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், இளைஞர் அணி செயலாளர், கழக துணை பொதுச் செயலாளர், கழக பொருளாளர், கழக துணை தலைவர், கழகத் தலைவர் என்றும், பொது வாழ்வில் சென்னை மாநகர மேயர், சட்ட மன்ற உறுப்பினர், தமிழ்நாடு துணை முதல்வர், தமிழ்நாடு முதல்வர் என்று உழைப்பால் உயர்ந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் ஸ்டாலின் என்றால் உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என்று பாராட்டு பெற்ற நமது கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாள் மார்ச் 1ம் தேதி கழகத்தினரால் எழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.*

*கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாளை நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகள், வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கியும், ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மரக்கன்றுகள் வழங்கியும், நட்டும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களிலும், ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உணவு மற்றும் உடை வழங்கியும், கழகத் தலைவர், தளபதி அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம், தெருமுனைப் பிரச்சார கூட்டங்களை நடத்தியும், எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடிட வேண்டும். ஒன்றிய, நகர, பேரூர் செயாளர்கள் கழகத்தினருக்கு கழகத்தலைவர் தளபதி பிறந்த நாள் நிகழ்ச்சிகளை சிறப்பாக கொண்டாடிட அறிவுறுத்திட வேண்டும் என்றும், கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாடசி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர் மன்ற, பேரூராட்சி மன்ற முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிவாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைரும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும். இவ்வாறு தனது அறிக்கை யில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.*

### சேலம் கிழக்கு மாவட்டத்தில்

# மார்ச் 1 முதல்வர் பிறந்த நாளை நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

## எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. வேண்டுகோள்!

சேலம், மார்ச் 1–

சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

மார்ச் 1 அன்று 73வது பிறந்த நாள் காணும், முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர், இந்தியாவே போற்றும், இந்திய அளவில் முதன்மை முதலமைச்சராக திகழும் எங்கள் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டத்தை நிறைவேற்றி வருகிறார். கலைஞர் மகளிர் உரிமை தொகை மூலம் தமிழக பெண்களுக்கு மாதம் ரூ.1000/ அளித்தவர் பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து வசதி ஏற்படுத்தி தந்தவர்! புதுமை பெண் திட்டம் மூலம் கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/ வழங்கியவர்! காலை உணவு திட்டம் மூலம் பள்ளி குழந்தைகளின் பசியாற்றியவர்! நான் முதல்வன் திட்டம் மூலம்



தமிழ்நாட்டின் இளைஞர்களின் திறன் மற்றும் பயிற்சி மேற்கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்தியவர்! இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 என்ற உன்னதமான திட்டம் மூலம் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 48 மணி நேர சிகிச்சையினை அரசு ஏற்கும் என அறிவித்தவர் ! இது போன்ற எத்தனையோ எண்ணற்ற திட்டங்களை நாள்தோறும் நிறைவேற்றி தமிழக மக்களுக்கு தேர்தல் அறிக்கையில் சொன்னதை 90 சதவிகிதம் முடித்ததுடன் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார் நம் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர்.

இந்திய அளவில் உறுதியான கூட்டணி அமைத்து தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் கழக தலைவர் அவர்கள், ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதிப்பகிர்வு, கூட்டாட்சித் தத்துவத்துக்கு விரோதமாகச் செயல்படும் ஆளுநர், அவதூறு பரப்பும் மக்கள் விரோத சக்திகள். உள்ளிட்ட பல்வேறு இடையூறுகளைத் தாண்டி, மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி, நல்லாட்சி நடத்தி வருகிறார். அவர் இதே உற்சாகத்துடன் மக்கள் பணியை மென்மேலும் தொடர, சேலம் கிழக்கு மாவட்ட கழகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு வரும் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகள் வெற்றி பெற்று,

வெல்வோம் 200! படைப்போம் வரலாறு!! என்ற கழகத் தலைவரின் சொல்லை மனதில் ஏந்தி ஒவ்வொரு நாளும் உழைப் போம்! உழைப்போம்!! உழைப்போம்!!! என்றும்

இளையோர் எழுச்சி நாளான கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள தலைவாசல் (மத்திய, வடக்கு, தெற்கு), கெங்கவல்லி, ஆத்தூர், பெத்த நாயக்கன்பாளையம் (மத்திய, வடக்கு, தெற்கு), வாழப் ப்பாடி (வடக்கு, தெற்கு), அயோத்தியாப்பட்டணம் (வடக்கு, தெற்கு), ஏற்காடு, பனமரத்துப்பட்டி, சேலம், வீரபாண்டி ஆகிய ஒன்றிய கழகங்கள் சார்பாகவும், ஆத்தூர், நரசிங்கபுரம், ஆகிய நகர கழகங்கள் சார்பாகவும், ஆட்டையாம்பட்டி, இளம்பிள்ளை, மல்லூர். பனமரத்துப் பட்டி, அயோத்தியாப்பட்டணம், பேளூர், வாழப்பாடி, பெத்தநாயக்கன் பாளையம், ஏத்தாப்பூர், கீரிப்பட்டி, தம்மம்பட்டி, கெங்கவல்லி, தெடா வூர், செந்தராப்பட்டி, வீரகனூர் ஆகிய பேரூர் கழகங்கள் சார்பாகவும், ஊராட்சிகள் சார்பாகவும் தோர ணங்கள் அமைத்து இருவண்ணக் கொடியேற்றி, ஏழை,எளியோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவது, கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவி என மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடுமாறு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மார்ச் – 1 கழகத் தலைவர் – திராவிட நாயகர்

# முதல்வரின் 73வது பிறந்தநாள் விழா!



## கழகத் தோழர்களுக்கு நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு வேண்டுகோள்.!

நீலகிரி, மார்ச் 1–

மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜீ அறிக்கை வருமாறு:–

நம் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் மார்ச் 1ம் தேதி தனது 73 வது வயதில் அடியெடுத்து வைக்கிறார்கள். இது கழக தோழர்கள், தமிழக மக்கள் மட்டுமின்றி உலக தமிழர்கள் அனைவராலும் கொண்டாப்பட உள்ள பொன் நாளாக அமைய உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சராக அவர்கள் பொறுப்பேற்ற 5 ஆண்டுகளில் திராவிட மாடல் ஆட்சியில் நாட்டு மக்களின் நலனிற்காக மட்டுமே தொடர்ந்து உழைத்து அறிவித்த திட்டங்கள் மூலம் இந்திய நாட்டிலுள்ள மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக திகழ்ந்து "நம்பர் ஒன் முதலமைச்சர் என்கிற பெருமை பெற்றது கழகத்தின் ஒவ்வொரு தொண்டர்களுக்கும் பெருமைக்குரியதாகும்.

கழகத்திலும், அரசு நிர்வாகத்திலும் தான் வகித்த பொறுப்புகள் அனைத்திலும் உழைப்பை மட்டுமே லட்சியமாக கொண்டு சாதனை படைத்தவர் நம் தலைவர் அவர்கள், இன்று முதல்வராகவும் மிகச்சிறப்புடன் பணியாற்றி பல சாதனைகளை படைத்து வருகிறார்.

தந்தை பெரியாரின் கொள்கை உறுதியும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அரவனைப்பையும், சமூக நீதியை நிலைநாட்டுவதிலும், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் போராட்ட குனத்தையும் ஒருங்கே பெற்று, தன்னுள் அடக்கி சிறப்புடன் செயல்பட்டு வரும் நம் கழக தலைவர், முதல்வர் அவர்களின் 73 வது பிறந்தநாளை ஒவ்வொரு கழக தொண்டனும் கொண்டாட வேண்டிய நன்னாளாகும்.

அதன்படி, நீலகிரி மாவட்டத்திலும், மார்ச்1 ம் தேதி அனைத்து நகர ஒன்றிய – பேரூர் – கிளை கழக அமைப்புகளில் கழக கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும், பட்டாசு வெடித்து, ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கியும், ஏழை எளிய மக்கள் பெரிதும் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை நடத்துவதோடு, விளையாட்டு போட்டிகள், கழக அரசின் சாதனைகளை பட்டித் தொட்டி எங்கும் கொண்டு சென்றிடும் வகையில் தெருமுனை கூட்டங்கள், தின்னை பிரச்சாரங்கள், போன்ற நிகழ்ச்சிகளையும் மார்ச் மாதம் முழுவதும் சிறப்புடன் நடத்திட ஏற்பாடுகள் செய்திட நீலகிரி மாவட்டத்திலுள்ள கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேராசிரியர் மா.இளஞ்செழியன்

**மார்ச் 1 (2009)**



**தி.மு.க. தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.**

**தந்தை காஞ்சி மணிமொழியாருடன் இணைந்து 1947களில் 'போர்வாள்' சொந்தமாக நடத்தி, அதன் ஆசிரியராக செயல்பட்டவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் பேராசிரியாகவும், அதன்பின் கல்லூரி முதல்வராகவும் விளங்கிய இவர் 'தமிழன் தொடுத்த போர்', 'அறிஞர் அண்ணாதுரை', 'ஈரோட்டுப் பாதை' ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.**

**இளஞ்செழியன் நடத்திய 'போர்வாள்' ஏடு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் கரங்களில் போர்வாளாகவே மின்னிக் கொண்டிருந்தது.**

**"இளஞ்செழியன் எழுதிய 'தமிழன் தொடுத்த போர்' என்கின்ற அந்த நூலும், இன்னமும் தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு நமக்கெல்லாம் பக்க பலமாக இருக்கக்கூடிய ஒரு பெட்டகம் ஆகும்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.இரவிச்சந்திரன்

**மார்ச் 1 (2021)**



**தளது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.**

**முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திருப்பனந்தாள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**திருப்பனந்தாள் ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றிய பெருந்தலைவர், நிலவள வங்கி தலைவர், சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டக சாலை தலைவர், திருவிடைமருதூர் வீட்டு வசதி வாரிய தலைவர், மாநில நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை வேளாண் விற்பனைக்குழு துணைத் தலைவர் என பல்வேறு பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**